பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 2 புதன்கிழமை (18.07.2001) தொலைபேசி: 3378 ஒலி: 219

# மாணவர்களின் சாத்வீகப்போராட்டத்தை அடுத்து மாணவன் திவ்யன் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்!

## மருத்துவ பரிசோதனைக்கு நீதிபதி உத்தரவு

(நீதிமன்ற நிருபர்கள்)

இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு காங்கேசன் துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவனும், மாணவர்ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கி. திவ்வியன் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் இ.த விக்கினராஜா முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிசாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

காங்கேசன் துறை பயங்கரவாத தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி சார்பில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணாசேன சந்தேகநபர் திவ்வியனை ஆஜர்ப்படுத்தி 1979 ம் ஆண்டின் 48 ம் இலக்க பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் தற்காலிக ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கும்வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு கேட்டிருந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

# ஓயாத அலைகளுக்கு 5 வருடம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் "ஓயாத அலைகள்" இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது 1996ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதி விடுதலைப்புலிகள் தொடுத்த இராணுவ நடவடிக்கையே "ஓயாத அலைகள்" என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ- 06)

## யாழ். பல்கலைக்கழக விவகாரம்

# அனைத்து மாணவர்களும் இன்று கூடி முடிவெடுப்பர்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்பல்கலைக்கழக மாணவன் திவ்வியன்நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இன்றுபல்கலைக்கழக அனைத்துபீட மாணவர்களும் கூடிஆராயவுள்ளனர்.

இதேவேளை திவ்வியன் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதைஅடுத்து பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் ஒன்றுகூடி சாதகமான தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் அது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு

(8ம் பக்கம் பார்க்க)

# நிலத்தில் என்னை உதைத்து விழுத்தி சப்பாத்துக் காலால் உழக்கினர்

## திவ்வியன் நீதிமன்றில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 8ந்திகதி எனது நண்பன்ஒருவனை சந்திப்பதற்கு உருபபிராய்க்குச் சென்றுகொண்டிருந்த போது மூன்றுகோவிலடிவாசல் பக்கத்தால இராணுவத்தினர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தனர் எனக்குப்பின்னால் வந்துகொண்டிருந்தவர் இராணுவத்தினரின்தடையை மீறி தாண்டியபோது துப்பாக்கிபிரயோகம் இடம்பெற்றது.

நான் கைகளை உயர்த்தியவாறுநின்றபோது அந்தநபரை இராணுவத்தினர் துரத்திச் சுட்டனர்.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தடுத்துவைக்கப் பட்டிருந்த யாழ் பல்கலைக்கழக மாணவன்கி திவ்வியன்நேற்று நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி இ த விக்கினராஜா முன்

[7ம் பக்கம் பார்கக]

# மாணவன் திவ்வியனை சட்டவைத்திய அதிகாரி பரிசோதனை செய்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதிமன்றில ஆஜர்படுத்தப்பட்ட யழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிபதி விடுத்தஉத்தரவுக்கு அமைய. யாழ் போதனா வைத்திய அதிகாரிசி இராஜேஸ் வரன் திவ்வியனை நேற்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

சுமர் இரண்டு மணித்தியாலங்கள் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட வைத்திய அதிகாரி. மருத்துவ பரிசோதனை அறிக்கையை நீதவானிடம் ஒப்படைப்பதாகதெரிவித்தார்.

அத்துடன்மாணவன்வைத்திய விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய அவசியமில்லையெனவும் தேவையேற்படின் சிகிச்சைக்காக கிளினிக்குக்குவருமாறும் அவர் கூறியுள்ளார் (இ06.10]

# இன்று வன்னியில் கண்டனக் கதவடைப்பு

(வவுனியா)

காலவரையறையின்றிமூடப்பட்டுள்ள யாழ் பல்கலைக் கழகம் திறக்கப்பட வேண்டுமெனவும் விஞ்ஞானபீடமாணவன்திவ்வியனை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமெனவும் கோரியாழ் பல்கலைக் கழக மாணவ சமூகத்தின் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று வன்னியில் மாபெரும் கண்டன கதவடைப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்கண்டன கதவடைப்பு போராட்டத்துக்கு மக்கள் அனைவரும் பங்களிப்பு வழங்குவதுடன் அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள், கல்வி நிலையங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் தனியார் நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் போக்குவரத்து துறையினர் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி போராட்டம் வெற்றி பெற உதவுமாறு ஒன்றியச் செயலாளர்கோரிக்

(8ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிக்கு எதிராக பத்திரிகையாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எதிராகவும், அவரின் பாதுகாப்பு பிரிவினருக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பியவாறு நேற்று நண்பகல கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாகபத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திர ஊடக இயக்கத்தைச்சேர்ந்த பத்திரிகையாளர்கள், நேற்று முன்தினம் அதிகாலை அரசுக்கெதிரான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தனர். அப்போது அங்குவந்த ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர்

(8ம் பக்கம் பார்க்க)

# பொலிசார் தடுத்த சம்பவம் சபாநாயகரிடம் முறையீடு விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு சென்ற போது அதனைப் பொலிசார் தடுத்த சம்பவம், ஜனநாயக விரோதச் செயலென்றும், சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ எம்.பி விநோராதலிங்கம், முஸ்லிம் கரங்கிரஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்

## ஐ.தே கட்சி ஏற்பாடு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஜனநாயக விரோதச் செயல்களைக் கண்டித்து நாளை கொழும்பில் மாபெரும் மக்கள போராட்டம் ஒன்றை நடத்த ஐக்கியதேசியக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

நேற்று ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் இணக்கம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே ரணில்விக்கிரமசிங்கா இதனைத தெரிவித்துள்ளார்.

இம்மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ

(8ம் பக்கம் பார்க்க)

# யுத்த பிரதேசங்களில் செய்தி சேகரிப்பதற்கு விதித்த தடை நீக்கம்

[கொழும்பு]

வடக்கு கிழக்கு யுத்தப் பிரதேசங்களில செய்தி சேகரிடபிற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை அரசாங்கம்நேற்று விடுத்துள்ளது. அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதுவரை காலமும் யுத்தப்பிரதேசங்களில் செய்தி சேகரிப்பதற்கு செய்தியாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டி இருந்தது. இனிமேல் அந்த நடைமுறை பின்பற்றப்படமாட்டாதெனவும், செய்தியாளர்கள் சுதந்திரமாகச் சென்று யுத்தப் பிரதேசங்களில் செய்திகளை சேகரிக்க முடியுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ந-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## படகுச் சேவை

(மண்டைதீவு)

அனலைதீவு பொதுமக்களின் நலன் கருதி கடந்த 16 ஆம் திகதி முதல் தனியார் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை, காலை 9. 30 மணிக்கு கண்ணகை அம்மன் கோவில் துறைமுகத்தில் இருந்து ஆரம்பமாகி எழுவைதீவு, அனலைதீவு ஆகியவற்றுக்குச் சென்று பி. ப. 2 .00 மணிக்கு கண்ணகை அம்மன் கோயில் துறைமுகத்தைச் சென்றடையும்.

(உ-11)

## குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

கடந்த 14 ஆம் திகதி தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொறியியற் பிரிவினர் 8, மி மீ மோட்டார் குண்டுகள் - 69, வெளிச்சக்குண்டுகள் - 25, 60 மி மீ.குண்டுகள் - 27, ஆகியவற்றைக் கண்டெடுத்து அழித்ததாக ஊடகத்தகவல்மையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## தீர்த்தமாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தத்தில் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்வதற்கும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(செ)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என் ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாம் செல்லவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்களை எடுத்துச்சென்று அவர்களிடம் ஒப்படைப்பதுடன் கைதிகளினால் உறவினர்களுக்கு கொடுக்கப்படும் கடிதத்தினையும் மறுநாள் அவர்களின் உறவினர்களிடம் கையளிப்பார்.

(உ-10)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலைமாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப்பயணம செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 164000 ஏ | 164000 பி |
| 166936 ஏ | 166936 பி |
| 179059 ஏ | 179059 பி |
| 179059 சி | 179478 ஏ |
| 179478 பி | 179478 சி |
| 181529 ஏ | 181685 ஏ |
| 184849 ஏ | 184849 பி |
| 184849 சி | 185074 ஏ |
| 195074 பி | 186821 ஏ |
| 188670 ஏ | 188670 பி |
| 188670 சி | 188670 டி |
| 188734 ஏ | 188734 பி |
| 188734 சி | 188775 ஏ |
| 189349 ஏ | 189349 பி |
| 190451 ஏ | 190451 பி |
| 190587 ஏ | 190662 ஏ |
| 190662 பி | 191850 ஏ |
| 191858 ஏ | 191859 ஏ |
| 191859 பி | 191976 ஏ |
| 192238 ஏ | 192266 ஏ |
| 192270 ஏ | 192273 ஏ |
| 192274 ஏ | 192274 பி |
| 192283 ஏ | 192285 ஏ |
| 192285 பி | 192289 ஏ |
| 192289 பி | 192289 சி |
| 192295 ஏ | 192297 ஏ |
| 192304 ஏ | 192304 பி |
| 192332 ஏ | 192360 ஏ |
| 192360 பி | 192403 ஏ |
| 192403 பி | 192403 சி |
| 192466 ஏ | 192466 பி |
| 192466 சி | 192466 டி |
| 192488 ஏ | 192488 பி |
| 193494 ஏ | 193494 பி |
| 193498 ஏ | 198668 ஏ |
| 193758 ஏ | 193758 பி |
| 193775 ஏ | 194482 ஏ |
| 194482 பி | 195027 ஏ |
| 195027 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 191815 ஏ | 191815 பி |
| 191996 ஏ | 192217 ஏ |
| 192217 பி | 192217 சி |
| 192242 ஏ | 192408 ஏ |
| 192409 ஏ | 192410 ஏ |
| 193787 ஏ | 193787 பி |
| 193787 சி | 194244 ஏ |
| 194244 பி | 194245 ஏ |
| 194412 ஏ | 194412 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 141807 ஏ | 182609 ஏ |
| 182698 ஏ | 182698 பி |
| 186736 ஏ | 186975 ஏ |
| 186976 ஏ | 187065 ஏ |
| 190721 ஏ | 190738 ஏ |
| 190738 பி | 190738 சி |
| 190749 ஏ | 190749 பி |
| 191753 ஏ | 191753 பி |
| 191805 ஏ | 191810 ஏ |
| 191510 பி | 19 862 ஏ |
| 191869 ஏ | 191869 பி |
| 191922 ஏ | 191966 ஏ |
| 191966 பி | 191993 ஏ |
| 192201 ஏ | 192227 ஏ |
| 19 264 ஏ | 192278 ஏ |
| 192298 ஏ | 192309 ஏ |
| 192309 பி | 191314 ஏ |
| 192337 ஏ | 192355 ஏ |
| 192357 ஏ | |

(தொடரும்)


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் கடமையாற்றும்

**திரு. சி. சுதாசன் அவர்களின்**

அன்புத் தாயார்

**சிங்கராசா அன்னம்மா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்,
உறுப்பினர்கள்,
நல்லூர் பிரதேசசபை ஊழியர்கள்
நலன்புரிச் சங்கம்.

(3350)


## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாக திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு ஆடி மாதம் 31 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படுர் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. மின் மின்னிணைப்பு வழங்குதல் மத்திய மருந்தகம், காரைநகர் | ரூபா 2000/- | ரூபா 250/- |
| 2. சுற்றுமதில் நிர்மாணித்தல் மத்திய மருந்தகம், உடுவில் | ரூபா 2000/- | ரூபா 250/- |
| 3. கோண்டாவில் மத்தியமருந்தகமும் மகப்பேற்றுவைத்தியசாலைக் கட்டிடங்கள் அனைத்திற்கும் நீர் விநியோகக் குழாய், கழுவுகான் அமைத்தல். | ரூபா 3000/- | ரூபா 250/- |

5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரிசீலிக்கலாம். இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

[C/2237]

### வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 27 07. 2001 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினமே பி ப. 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, 'தவிசாளர் வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 27 07 2001 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம | கேள்விப் பத்திரப் பணம | பொருட்கள் சேவைகளுக்கான வரி |
|---|---|---|---|
| 1. இருபாலை மரக்கறி, மீன் சந்தை கொட்டகை அமைத்தல் | 2500 00 | 500.00 | + 62.50 |
| 2. கோப்பாய் உப அலுவலகத் திருத்தம் | 1000.00 | 200.00 | + 25.00 |
| 3. உரும்பிராய் உப அலுவலகத் திருத்தம் | 1350.00 | 250.00 | + 31.25 |
| 4. கணனி அறை அமைத்தல் (உரும்பிராய்) | 400.00 | 150.00 | + 18.75 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 26 07. 2001 ம் திகதி பிற்பகல் 12 30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பூ. குணசிங்கம், ஜே. பி. யு. எம்,
தவிசாளர்
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
16. 07. 2001

(C-2236)

## ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க

# மூன்று கட்சிகள் ஒன்றிணைவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராக அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கேட்டுக்கொண்டுள்ளார்.

இடதுசாரிக்கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் நடத்திய கூட்டம் ஒன்றில் பேசும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

கொழும்பு நூலககேட்போர் கூடத்தில் இடதுசாரிக் கட்சிகளின் ஒன்றிணைந்த புதிய அமைப்பினை உருவாக்கும் வைபவம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய ஜனநாயக மக்கள் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன கலந்துகொண்டன.

இக் கட்சிகள் மூன்றும் இணைந்து ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கென்று 'ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் கூட்டமைப்பு' என்னும் பெயரில் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

இந்தஅமைப்பு அரசின் ஜனநாயகவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தவுள்ளன.

(வ)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு

# விரிவுரையாளர்கள் நால்வர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்,மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. தணிகாசலம்பிள்ளை ஆகியோர் மேற்படி கலாசாலையில் நிலவும் விரிவுரையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக்கீழ் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து மாகாண அமைச்சு அதிகாரிகளுடனும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து நான்கு விரிவுரையாளர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு இடமாற்றம் பெறுவதற்கு வசதி செய்துள்ளார்.

(உ)

## ஆடி அமாவாசை உற்சவம்

# கீரிமலைக்குச் சென்று வர விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்களின் வசதி கருதி வழமை போல் இம்முறையும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை, போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளது.

அனுமதிக்கப்பட்ட தெல்லிப்பழை சேந்தாங்குளம் பகுதிகளில் இருந்து கீரிமலைவரைக்கும் விசேட சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில், யாழ்ப்பாணத்திலிருந்து வலிகாமம் ஊடாக செயலாற்றப்படும் பாதை இல 787, 788, 789, 736ன் சேவைகள் இந்த உற்சவத்தை முன்னிட்டு 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சேந்தாங்குளம் வரை செயலாற்றப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கே.கே.எஸ். வீதி ஊடாகவும், பலாலி வீதி ஊடாகவும் செயலாற்றப்படுகின்ற பாதை இல. 764, 769, 770, 771, 768 சேவைகள் தெல்லைப்பழை வரை செயலாற்றப்படும்.

பாதை இல. 811ன் சேவைகளும் தெல்லைப்பழை வரை செயலாற்றப்படும்.

காரைநகர் அடியார்களின் நன்மை கருதி காரைநகரிலிருந்து சித்தங்கேணி, பண்டத்தரிப்பு வழியாக சேந்தாங்குளம் வரையும் சேவைகள் நடைபெறும்.

தெல்லிப்பழையிலிருந்து-கீரிமலைக்கு இருவழிக் கட்டணமாக ரூபா 15 உம், சேந்தாங்குளத்திலிருந்து - கீரிமலைக்கு இரு வழிக்கட்டணமாக ரூபா 10 உம் அறவிடப்படும் என வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

(உ)

# மோட்டார் சைக்கிள்விபத்து மாணவன் படுகாயம்

(ஏழாலை)

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் அதனைச் செலுத்திய மாணவன் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவராசா பிரதாப்(வயது15) என்ற மாணவரே படுகாயமடைந்தவராவார்.

(உ-12)

# தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாரம் வெளியாகும்

[கொழும்பு]

ஓகஸ்ட் 21ஆம் திகதி இடம்பெறுப என அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பான விஞ்ஞாபனம் இவ்வாரம் வெளியாகும்.

நான்கு விடயங்களை உள்ளடக்கிய இவ்விஞ்ஞாபனத்தை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்சரத் அமுனுகம தயாரித்து வருகிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், தேர்தல் முறையை மாற்றியமைத்தல், அதிகாரப்பரவலாக்கம், சுதந்திரஆணைக்குழுக்கள் அமைத்தல் என்பவற்றை உள்ளடக்கி அது தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

(உ)

# உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்று நேற்று முன்தினம நடைபெற்றபோது சிவகுரு ச.ச. நிலைய அணி, ஜெயபாரதி அணி, கொக்குவிட மத்திய ச.ச. நிலைய அணி முதலியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன.

(உ-5)

# இராசி பலன்

18-07-2001

(ஆடி 2, புதன்)

துவாதசி மு.ப. 7.37 வரை
மிரகசீரிடம் பி இ 3.13 வரை
இராகுகாலம் 12.00-1 30
நல்லநேரம் 4.30-6.00
பிரதோச விரதம்.

**மேடம்**
காரிய நன்மை, வாக்கு மேன்மை, கூட்டு முயற்சி, பிரயாணம்.

**இடபம்**
மதிப்புக் குறைவு, வக்குப், பகை,பொருள் விரயம்,எதிர்பாராத நலம்.

**மிதுனம்**
தேகநலம், நல்ல முயற்சி, கற்பனை மிகுதி, பெரியோர் மதிப்பு.

**கடகம்**
உஷ்ண வியாதி, பிரயாணம், முயற்சி தாமதம், நித்திரைக் குறைவு.

**சிங்கம்**
பெருமை, மனமகிழ்ச்சி, எதிர்பாராத மனஸ்தாபம், காரியம் கைகூடும்.

**கன்னி**
கடின உழைப்பு,கீழ்ப்படிவு, அதிகாரம், முயற்சிகைகூடும்.

**துலாம்**
வயிற்றுக்கோளாறு,பிரயாணம், அச்சப்படுதல், புதிய முயற்சி.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், நிலைமாற்றம், வியாதி.

**தனுசு**
களஸ்திரசுகம், அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும்,பெரியோர் மனஸ்தாபம.

**மகரம்**
வியாதி குணமடைதல், காரியநனமை,சந்தோசமான நிகழ்வு, தொழில் விருத்தி.

**கும்பம்**
புத்திரரால் கவலை பிரயாண தாமதம், திடீர் நன்மை, காரிய தாமதம்.

**மீனம்**
மனச்சஞ்சலம், உறவினர் மனஸ்தாபம், வியாதி, காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பாதுகாவலன்பத்திரிகை

# 125 ஆண்டு நிறைவு விழா ஏற்பாடுகள் துரிதகதியில்

(ஈச்சமோட்டை)

இலங்கையின் முதல் கத்தோலிக்கவார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்றுவருவதாகஅதன் ஆசிரியர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் மரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விழா வெகு விமரிசையாக யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு இதையொட்டி 125ஆம் ஆண்டு நிறைவு நினைவுமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

(உ-59)

## மானிப்பாய் லயன்ஸ்கழகத்திற்கு

# சர்வதேச லயன்ஸ் கழகங்களின் கௌரவம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகம் 2001, 2002 ஆம் ஆண்டுக்குரிய மாவட்டம் 306 பிக்கான உத்தியோகத்தர் பதவிகளில் சர்வதேச லயன்ஸ்கழகங்களின் கௌரவம் கிடைத்துள்ளது.

இவ் வருடத்தில் இக்கழகத்திற்கு மூன்று நிலைப்பதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் லயன். செ. ஞானராசாபிராந்தியம் 10 தலைவராகவும், லயன். சி. பத்மநாதன் இணைப்பாளராகவும், லயன்ஸ் சொ. பாலகிருஷ்ணன் மாவட்டத் தலைவர் லியோக் கழகவேலைத்திட்டங்களின் பொறுப்பாளராகவும். நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ-120)

## பாதாள உலகக் கும்பல்

# குழுக்களிடையே மோதல் துப்பாக்கிச்சூட்டில்மூவர்பலி

(கொழும்பு)

ஊறுகொடவத்த என்னுமிடத்தில் இரண்டு பாதாள உலகக் கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது.

பகல் வேளை பெருமளவு பொதுமக்கள் பார்த்து நிற்க, ஒரு வாகனத்தில் வந்த குழுவினர் துப்பாக்கிச் சூட்டில் கொலையுண்டவர்களின் வாகனத்தின் முன்பாக தமது வாகனத்தை நிறுத்திவிட்டு திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சுதாகரன் குழுவைச் சேர்ந்த மூவர் அவ்விடத்திலேயே பலியாகினர்.

வாகனத்தைஓட்டி வந்தவர் ஓடித்தப்பிவிட்டார்.

இறந்தவர்கள் தமிழ்நாடு என்றழைக்கப்படும் தோட்டத்தைச் சேர்ந்த முனியாண்டிரமேஷ், வசந்த, திஸ்ஸகுமார என்போர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரமேஷ் என்பவர் ஆயுதங்கள், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டவர்என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## மாகாணமட்ட

# தமிழ்த்தினப்போட்டி யாழ். மாவட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மாகாண மட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் 14 போட்டிகளில் யாழ் மாவட்டம் முதலிடங்களைப்பெற்று ஏனைய மாவட்டங்களை விட கூடிய போட்டிகளில் முதலிடங்களைத்தனதாக்கிக் கொண்டசிறப்பினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகளின் யாழ். மாவட்ட முடிவுகள் வருமாறு;

**★ பிரிவு 3 பேச்சு**
3ஆம் இடம்:- பே புஸ்பனா யா/ மகாஜனாக்கல்லூரி

**★ பிரிவு 5 பேச்சு**
2 ஆம இடம்:- கு. பார்மதி யா/ யூனியன் கல்லூரி

**★ பிரிவு2 பாவோதல்**
2 ஆ இடம:- டா நிரோஜா யா/ அராலி சரஸ்வதி ம.வித்தி.

**★பிரிவு 3 பாவோதல்**
2 ஆம இடம:- ஸ்ரீ தாரணி யா/ இநது மகளிர் கல்லூரி

**★ பிரிவு 4 பாவோதல்**
1 ஆம் இடம்:- ம. திருவரங்கன் யா/யாழ்ப்பாணக் கல்லூரி

**★பிரிவு 5 பாவோதல்**
3 ஆம் இடம்:- பா பிரணவன் யா/ மகாஜனாக் கல்லூரி

**★பிரிவு 2 பேச்சு**
2 ஆம இடம்:- யூட்பிரதீபன் யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி

**★ பிரிவு 2 தனி இசை**
3 ஆம் இடம்:-தெ.பவனுஜா யா/ வேம்படி மகளிர் கல்லூரி

**★பிரிவு 3 தனி இசை**
1 ஆம இடம:- கு. ஜெகதீசன் யா/ யூனியன் கல்லூரி

**★ பிரிவு 4 தனி இசை**
1 ஆம இடம:- து. கேசவன் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**★பிரிவு 5 தனி இசை**
1 ஆம இடம:- ந. தனசொரூபி யா/ கொக்குவில் இந்துக கல்லூரி

**★ பிரிவு 2 தனி நடனம்**
2ஆம இடம:-மே. வினோதா யா/ வேம்படிமகளிர் கல்லூரி

**★பிரிவு 3 தனி நடனம்**
1ஆம இடம்:- வ் ஜீவிதா யா/யூனியன் கல்லூரி

**★ பிரிவு 4 தனிநடனம்**
1 ஆம இடம:- ஏ.சுபத்திரா யா /வேம்படி மகளிர் கல்லூரி

**★ பிரிவு:- திறந்த போட்டி நடனம் குழு**
2 ஆம் இடம;- யா/ இராமநாதன் கல்லூரி

**நாடகம்**
3 ஆம் இடம்:- யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

**★வில்லுப்பாட்டு**
1 ஆம இடம்:- யா/ யாழ்ப்பாணக்கல்லூரி

**★ விவாதம்**
1 ஆம் இடம்:- யா/ பரியோவான் கல்லூரி

**★தமிழ் அறிவு வினா விடைப் போட்டி**
2 ஆம் இடம்:- யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

(உ-3)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல- 26

## ஆக்கம்: செல்வி

★ சாரு என்னும் மாணவியின் குடும்ப விபரம் பற்றிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

சாருவின் அப்பா பாலசுந்தரம் என்பவர், அரசாங்க அலுவலகம் ஒன்றில் எழுது வினைஞராகக் கடமையாற்றுகிறார் அவளது அம்மா சாந்தி என்பவர் அவரது மூன்று குழந்தைகளையும் கண்காணிப்பதுடன் வீட்டு வேலைகளையும் செய்கிறார் இவர்கள் 35/7 புதுவீதி யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் வசிக்கின்றார்கள். 2000 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி சாருவிற்கு வயது 9 ஆகும். அவளுக்கு ஒரு சகோதரி இருக்கின்றாள்.

01) சாருவின் அப்பாவின் பெயர் என்ன?
02) அவரது தொழில் என்ன?
03) சாருவின் அம்மாவின் பெயர் என்ன?
04) அவரது தொழில் என்ன?
05) சாருவின் வீட்டு விலாசம் என்ன?
06) சாருவிற்கு எத்தனை ஆண் சகோதரர்கள் இருக்கின்றார்கள்?
07) சாருவிற்கு இப்பொழுது எத்தனை வயது?
08) சாருவின் பிறந்த தினம் எப்போது?

★ பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

09) கடுமையான வேலை செய்பவர்கள் (கொழுப்பு, மா, புரத) சத்துள்ள உணவுகளை அதிகளவில் உண்ண வேண்டும்.
10) மாடு ஒன்று (கடகட, சலசல, சுறமுற) என்ற சத்தத்துடன் வேலியைப் பிரித்து கொண்டு வந்தது.
11) திருடவந்த கள்வன் மறைந்திருந்த உருவத்தைக் கண்டு (கலகலவென, திடுதிடுவென, கடாரென) ஓடினான்.
12) அந்த அழகிய மலையின் உச்சியிலிருந்து பல ஆறுகள் (ஊற்றெடுக்கின்றது, ஊற்றெடுக்கின்றன, ஊற்றெடுத்தது)
13) ஊமையின் வாயிலிருந்து ஒருவித ஓசை (வந்தது, வந்தன, வந்தவை)

★ கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக

14) காய்ச்சல் நீரினால் பரவும் நோய் ஆகும் ( )
15) யாழ் குடா நாட்டு மக்கள் குளிப்பதற்கும், ஏனைய தேவைகட்கும் ஆற்று நீரைப்பயன்படுத்துகின்றனர். ( )
16) நோயாளிகளுக்கு திரவ உணவுகளே சாலச் சிறந்தது. ( )
17) இலங்கையில் நிலவும் முக்கியமான பிரச்சினை இயற்கை வளம் போதாமையாகும் ( )
18) இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். ( )

★ பொருத்தமானசொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக

19) கிறிஸ்தவர்களின் வேத நூல் ——— எனப்படும்.
20) மரக்கறிகளை ——— வேகவைப்பது சிறந்தது.
21) பௌத்தர்களின் ஆலயம் ——— எனப்படும்
22) ——— நீரைப் பருகுவதே உடலுக்கு நன்மை பயக்கும்.

★ பின்வரும் பாடலைப் படித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.

'மேற்குத் திசை வானம் தீ போல் சிவக்க
பகலோன் மெலிந்து மறைந்தது
காற்று வீசி பனித்திவலை தூற்றியது
காரிருள் பரவத் தொடங்கியது'

23) இப்பாடலில் குறிப்பிட்டிருக்கும் காட்சி எது?
24) '... ... பகலோன் மெலிந்து ...' எனும் பாடல் வரியின் மூலம் புலப்படுத்தப்படுவது?
25) வானம் தீபோல் சிவந்த காரணம் யாது?

★ பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

26) இலங்கையில் தேயிலை நன்கு செழித்து வளரும் பிரதேசம் எது?
27) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
28) நமது நாட்டின் தற்போதைய பிரதமர் யார்?
29) கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
30) 100 வது ஆண்டு நிறைவு விழாவினை எவ்வாறு அழைப்பர்?

★ 'அ' தொகுதிக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' தொகுதியில் இருந்து தெரிந்தெடுக்குக.

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| 31) | இலங்கை சுதந்திரம் அடைந்தது | சங்கிலியன் |
| 32) | போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது | ஊர்காவற்றுறை |
| 33) | யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த கடைசித் தமிழ் மன்னன் | நயினாதீவு |
| 34) | ஒல்லாந்தரின் கடற்கோட்டை அமைந்துள்ள இடம் | 1948 |
| 35) | மணிபல்லவம் என அழைக்கப்படுவது | 1505 |

★ பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

36) சிவா எனும் மாணவன் திங்கட்கிழமை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது அவனது நிழலானது அவனது இடது கைப்பக்கமாகத் தோன்றியது எனின் அவன் எத்திசையை நோக்கிப் பாடசாலைக்குச் சென்றிருப்பான்?
37) மைதானமொன்றில் பூனைகளும், புறாக்களும் சம எண்ணிக்கையில் காணப்படுகின்றன. அவை எல்லாவற்றினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை 24 எனின், மைதானத்திலிருந்த புறாக்களின் எண்ணிக்கை யாது?
38) தற்போது எனது வயது 7 எனது அப்பாவின் வயது எனது வயதைவிட ஐந்துமடங்கு கூட. அம்மா அப்பாவையும்விட ஐந்து வயது இளையவர் எனின் அம்மாவினதும், அப்பாவினதும் வயதுகள் எத்தனை?
39) கீதாவிடம் 10 முத்திரைகள் இருக்கின்றன சீதாவிடம் கீதாவிடம் இருக்கும் முத்திரைகளின் எண்ணிக்கையின் அரைவாசியிலும் 2 முத்திரைகள் கூடுதலாக இருக்கின்றன சுதாவிடம் சீதாவிடம் உள்ள முத்திரைகளிலும் இருமடங்கு முத்திரைகள் உள்ளன. ஆயின் மூவரிடமும் உள்ள முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
40) சிவதாவிடமும் அவளது நண்பி லதாவிடமும் மொத்தமாக 42 மாம்பழங்கள் உள்ளன லதா தன்னிடமுள்ள 7 மாம்பழங்களை சிவதாவிற்கு கொடுத்தால் இருவரிடமும் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை சமனாகும். எனின் சிவதாவிடமும். லதாவிடமும் ஆரம்பத்தில் இருந்த மாம்பழங்கள் எத்தனை?

குறிப்பு:-

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 23 07-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

## கல்விப் பகுதி
## வினா இல - 26
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ...............................

சொந்த முகவரி: ...............................

கற்கும் பாடசாலை: ...............................

மாணவர் கையொப்பம்: ...............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## தேர்த்திருவிழா

(அரியாலை)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது

இதனைமுன்னிட்டுமஹோற்சவ ஆரம்ப தினங்களிலிருந்து இப்பகுதி பற்றைகள் வெட்டி துப்பரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது (செ-106)

## புலமைப்பரிசில் பரீட்சை
## வினா இல-25
## விடைகள்

01] கொந்தளிக்கும் கடல்
02] இரவும் பகலும்
03] கருமை + கடல்
04] நிலவு
05] நாய்
06] கலங்கள்
07] மறி
08] colour
09] Pear
10] Goat
11] Bird
12] புத்தகம்
13] சித்திரம்
14] உலகம்
15] வேலை
16] மை
17] பென்சில்
18] கடதாசி
19) புத்தகம்
20] முட்டை
21] நாவலூர், கோயிலூர், சந்திரபுரம்
22] கோயிலூர்
23] மருதம்
24] வயல், உப்பாறு, தாமரைக்குளம், செந்நெஞ் சோலை, மாஞ்சோலை
25] குதூகலம்
26] 279
27] 9645
28] 368
29] 4365
30] 265
31] 3845
32] கருவி
33] தடி
34] விரகம்
35] கவி
36] 438ரூபா
37] 1 வயது
38] 2073 75ரூபா
39] 6 பேர்
40] 14 பேர்

## புலமைப் பரிசில் பரீட்சை
## வினா இல - 25

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

1) செ குலராஜ் உடுப்பிட்டி அ மி கல்லூரி
2) இ ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்.
3) மோ ஜீர்த்தன், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி.
4) ஏ தனுஷன், யாழ் மத்திய கல்லூரி.
5) இ சஞ்சீவ் யாழ் மத்திய கல்லூரி
6) க சஜநதன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
7) வா. பிரணவன், வல்வை. அ மி. த.க. பாடசாலை
8) இ பாமா, துன்னாலை மெ மி த.க. பாடசாலை
9) உ விஜீத், யாழ் மத்திய கல்லூரி
10 தே கர்சன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
11) பு. பிரசாந்தன். காரை நகர் தியாகராசா ம.ம. வித்தியாலயம்
12) கு கேதவன், யாழ் மத்திய கல்லூரி
13) க.நிரேஜினி யாழ் புனித மரியாள் வித்தியாலயம்
14) அ. கஜேந்திரஜன். யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
15) அ பாஸ்கரன், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்
16) ஜெ சாரங்கா, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
17) ச நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
18) த ஏகவரதன். யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
19) ஸ்ரீ அபிராமி, சிறுப்பிட்டி இ த க பாடசாலை
20) வே. துஸ்பந்தன், திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயம்
21) சி நிருபா, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
22) பொ நிரோசா கரணவாய் மகா வித்தியாலயம
23) ஸ் ஸ்ரனிஸ்ராஜ் யாழ் மத்திய கல்லூரி
24) பா மதுரா, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
25) பா. ஜெபந்துஷா, யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
26) ம நிறோஜா, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
27) ச கணேஸ்வரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
28) வி கோகுலன். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
29) சி சிவசெரூபன், யாழ் மத்திய கல்லூரி
30) தி அரவிந்தன், உடுவில் மகளிர் கல்லூரி
31) சி பிரசிந், சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்
32) க. சரவணபவன், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
33) ப. தமரா, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
34) ச கிருஷ்ணவேணன், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம
35) லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
36) வி. கலைகஷனா, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
37) சி டிலீப். யாழ். மத்திய கல்லூரி
38) ச. ரஞ்சித்குமார், வல்வை, விநாயகர் வித்தியாலயம்
39) கு. சிந்துஜா, வல்வை, ம ம. வித்தியாலயம்
40) மோ. மதன், வல்வை. ம. ம வித்தியாலயம்
41) ச. சாருஜா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
42) இ.நிருஜா, பெரியபுலம மகா வித்தியாலயம்
43) அ. நிருபன் துன்னாலை மெ மி த. க. பாடசாலை
44) சி. துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
45) ந.துசிகேதன், யாழ். மத்திய கல்லூரி
46) இ சகிலா, இமையாணன் அ. த க வித்தியாலயம்
47) சீ மேரிஜீவனா. சில்லாலை றோ. க. த. க. பாடசாலை
48) பு கயானா, வல்வை. அ. மி த. க. பாடசாலை
49) ம. திநேஷ், வல்வை ம ம வித்தியாலயம்
50) ம வித்தியா, வல்வை ம ம. வித்தியாலயம்
51) இ வினிபிறட்ஸ்ரீபன், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி
52) த ஹரியர்மன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
53) அ வஜீரன், யாழ் பரியோவான் கல்லூரி
54) வா. பமேசன் உடுவில் மகளிர் கல்லூரி
55) கு வினோஜனா, பெரியபுலம் மகா வித்தியாலயம்
56) இ சரண்யா, அச்சுவேலி மத்திய கல்லூரி
57 சு விவேக், வல்வை. சிவகுரு வித்தியாசாலை
58) கு யசோதன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை

## வவுனியாவில் வீரமக்கள் தினம

(வவுனியா)

வவுனியா கோவிற் குளம் பகுதியில் 12வது வீரமக்கள் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

வீரமக்கள் தினத்தையொட்டி பூவரசங்குளம் பகுதியில் உள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரனின் சமாதிக்கு மலர்மாலை அணிந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் வைபவத்தில் புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (ம)

## புதியதேர் அமைப்பு

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலயத்திற்குபல இலட்சரூபா செலவில் புதிதாக சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வருகிறது. (உ-12)

# இன்று ஒரு தகவல்

## நான் செத்த பிறகு வா!

ஓர் ஊரில் இராசா ஒருவர் இருந்தார் அவருக்கு மந்திரி இல்லாமலா இருக்கும்? அவரும் இருந்தார். அந்த அமைச்சர் ஒரு நாள் ஒரு காட்டுக்குப் போனார் அங்கு ஒரு துறவி உட்கார்ந்திருந்தார். அந்தத் துறவியைப் பார்த்தவுடன் இவர் ஓடிப்போய் அவர் காலில் விழுந்து வணங்கினார். உடனே அந்த துறவி அமைச்சருக்கு ஆசீர்வாதம் செய்தார். அவரை வாழ்த்தினார். 'நூறாண்டு காலம் வாழ்க' என்றார். அதைக் கேட்டவுடனே அமைச்சருக்கு மிகவும் திருப்தி. மனம் நிறைந்து போனது அந்த நிறைவோடு அரண்மனைக்குத்திரும்பி வந்தார் நேராக ராஜாவைப் போய்ப் பார்த்தார்.

எங்கே போய்விட்டு வருகிறீர்கள்' என்று கேட்டார் ராஜா. காட்டுக்குப் போய் விட்டு வருகிறேன் அது சம்பந்தமாகத்தான் உங்களிடம் சொல்ல அவசரமாக ஓடி வந்தேன் என்றார். என்ன விஷயம் என்று கேட்டார் ராஜா. 'காட்டில் ஒருதுறவிஉட்கார்ந்திருக்கிறார். அவரைப் பார்த்ததும் காலில் விழவேண்டும் போல் தோன்றியது விழுந்தேன் உடனே அவர் மனதார என்னை வாழ்த்தினார். ஆசீர்வாதம் பண்ணினார். நூறாண்டு காலம் வாழ்க! என்று வாழ்த்தினார். நீங்களும் அந்த சாமியாரிடம் போய் ஆசீர்வாதம் வாங்கினால் நல்லது' என்றார் அமைச்சர், ராஜா யோசித்துப் பார்த்தார். போய்விட்டு வந்தால் நல்லது தான் என்று முடிவு செய்தார். இப்போது நமக்கு நிலைமை சரியில்லாமலிருக்கிறது பக்கத்து நாட்டு ராஜா எப்போது நம்மீது பாயலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறான். அதனால் சாமியாரிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டால் நமக்கு அது ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று முடிவு செய்தார். உடனே காட்டுக்குப் புறப்பட்டுப் போனார். தனியாகவா போனார்? ராஜாவென்றால் சும்மாவா? சகல பரிவாரங்களோடும், மிகவும் ஆடம்பரமாக ஏகதடபுடலாகக் காட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். இவர் போய்ச் சேர்ந்த நேரத்தில் அந்த துறவி தியானத்தில் இருந்தார்.

சுவாமி தியானத்தில் இருக்கிறார், கொஞ்சம் பொறுங்கள், என்று அங்கேயிருந்த சீடர்கள் சொன்னார்கள். நான் யார் தெரியுமா? இந்த நாட்டு மன்னன! ராஜா வந்திருக்கிறார் என்று உங்கள் குருவிடம் சொல்லுங்கள் என்று உத்தரவு போட்டார் ராஜா. 'முனிவருடையதியானத்தைக் கலைக்க முடியாது' என்று சொன்னார்கள் சீடர்கள். சரி... வேறுவழி இல்லை, ராஜா காத்துக் கொண்டிருந்தார்.

நிரம்ப நேரம் கழித்துமுனிவர் கண்ணை விழித்துப் பார்த்தார்.

'நான் தான் இந்த நாட்டு ராஜா வந்திருக்கிறேன் என்னுடைய அமைச்சர் இங்கே வந்திருந்ததாகவும், நீங்கள் அவரை வாழ்த்தினதாகவும் கேள்விப்பட்டேன். அதுதான் வந்தேன் என்னையும் நீங்கள் வாழ்த்த வேண்டும். ஆசீர்வாதம் பண்ண வேண்டும்' என்றார். முனிவர் நிமிர்ந்து பார்த்தார். அமைச்சரை வாழ்த்தியதைவிட என்னைக் கொஞ்சம் அதிகமாகவே வாழ்த்த வேண்டும் ஏனென்றால் நான் ராஜா அல்லவா? என்று வேறு கேட்டுக் கொண்டார். அமைச்சரை நூறாண்டு காலம் வாழ்க என்றார். அதற்காக ராஜாவை நூற்றிப் பத்தாண்டு காலம் வாழ்க என்றா சொல்ல முடியும்?

முனிவர் அதைப்பற்றியெல்லாம் ஒன்றும் யோசிக்கவில்லை! நிமிர்ந்து அந்த ராஜாவைப் பார்த்து:''நான் செத்தபிறகுவா, அப்போது உன்னை வாழ்த்துகிறேன்'' என்று சொல்லிவிட்டார். செத்ததற்குப்பின்னர் எப்படி வாழ்த்த முடியும்? ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை ஒரே குழப்பமாகப் போனது திரும்பிவந்து விட்டார் அமைச்சரைக் கூப்பிட்டார் விஷயத்தை சொன்னார் ''முனிவர் இது மாதிரிச் சொல்லிவிட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை, அதுதான் திரும்பி வந்து விட்டேன்'' என்றார், முனிவர் அப்படிச் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று அமைச்சருக்கு புரிந்து விட்டது. ராஜாவுக்கு அதை விபரமாக எடுத்துச் சொன்னார் ''மன்னா! முனிவர் நான் என்று சொன்னது தன்னைப் பற்றி இல்லை உங்களிடம் இருக்கிற நான்'' என்கிற அகங்காரத்தைத்தான் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார் அந்த நான் என்கிற செருக்கு உங்களிடமிருந்து ஒழிந்தபின்னர் அவர் தங்களிடம் வரச்சொல்லியிருக்கிறார் என்று அமைச்சர் விளக்கினார் ராஜாவுக்கு அதன் பின்னர்தான் விபரம் புரிந்தது.

தன்னிடமிருந்த அகங்காரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்தார் அது பூராகவும் ஒழிந்த பின் மறுபடியும் துறவியிடம் போனார். மனப்பூர்வமாக ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த ''நான்'' நம்மிடமிருந்து போனால் தான் பெரியவர்களின் ஆசீர்வாதமே நமக்குக் கிடைக்கும் போலிருக்கிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### க. பொ. த. (உத) பரீட்சைக்கு

## தோற்றும் மாணவர்க்கு மின்சாரசபை உதவிடுமா

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நெருங்கிவரும் இந்நேரம் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் வசதி கருதி சீரான மின்சாரம் கிடைப்பதற்கு மின்சாரசபை வழிசெய்ய வேண்டும் என பரீட்சையை எதிர்கொள்ளும் குடாநாட்டு மாணவர், மற்றும் பெற்றோர் தரப்பில் எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரம் திடீர் திடீரென தடைப்படுவதால் தொடர்ச்சியான தமது கல்விச் செயற்பாடு தடங்கல் அடைவதாகவும் தமது மேற்படி பிரச்சினையை உரியவர்கள் கவனத்தில் எடுத்து ஏற்றநடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-9)

# வாக்குச்சீட்டில் மோசடியை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை

### தற்றுணிவின் பேரில் தே.ஆணையாளர் எடுப்பார்

(கொழும்பு)

2000 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நடந்த தேர்தலில் நிகழ்ந்தது போன்று எதிர் வரும் மாதம் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் போது வாக்குச்சீட்டில் மோசடி இடம் பெறாது. தடுப்பதற்கான சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸநாயக்க தனது தற்றுணிவின் பேரில் எடுப்பார்

இவ்வாறு உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்காமல் அவர் தனது நடவடிக்கைகளை எடுக்க மாட்டார் எனவும்,

வாக்கெடுப்பை நடத்தத் தேவைப்படும் 500 மில்லியன் ரூபாவை திறைசேரியில் இருந்துபெற்றுக் கொள்வார் என்றும்தெரிவித்தார். (உ)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வலிதென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் அந்தந்ததபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய தபாலகங்களுக்கு சென்று தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## ஆதீன முதல்வர் யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

கனடாவுக்கு சமயப் பயணம் மேற்கொண்ட ஆதீன முதல்வர் நேற்று முன்தினம் யாழ் வந்து சேர்ந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6.30மணியளவில் யாழ் வந்த அவருக்கு ஆதீனத்தில் பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது (ந)

## இளைஞன் அடையாளம் காட்டினார்

(யாழ்ப்பாணம்)

அல்லாரைப் பகுதியில் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய இராணுவச் சிப்பாய்களை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அடையாளம் காட்டியுள்ளார்.

இதனையடுத்து அடையாளம் காட்டப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அடையாளம் காட்டிய இளைஞனுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாமென அஞ்சி பிரஸ்தாப இளைஞனை ஈ பி டி பியினர் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். (இ)

## ஆயுதங்கள் அழிப்பு

(கொழும்பு)

மீசாலைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் 81 மி மீ மோட்டார் குண்டுகள் 3, 60 மி மீ மோட்டார் குண்டுகள் 4 என்பவற்றைக் கண்டெடுத்து அழித்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கோயிலாக்கண்டிப்பகுதியில் ரோந்து சென்ற படையினர் கடந்த 14 ஆம் திகதியன்று மதகின்கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த, மகசீனுடன் ரி-56 ரகத் துப்பாக்கி மற்றும் உடைகள் என்பவற்றைக் கண்டெடுத்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

## பாராளுமன்ற ஒத்திவைப்பு ஜனநாயக மீறல் செயல்

### சுதந்திர ஊடக இயக்கம் சாடல்

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்ததும், அர்த்தமற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதும் ஜனநாயகத்தை மறுக்கும் செயலாகும் என்று சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் கூட்டாக சமர்ப்பித்துள்ள அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறுவதைத் தவிர்ப்பதற்காகக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப் பட்டிருகிறதென்பது தெளிவாகத் தெரிகிறது.

மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியலமைப்பு மாற்றம் பற்றி நன்கு கலந்துரையாடப் பட்ட பின்னரே மக்களாணை பெறப்படுவதற்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் இதுவும் அரசாங்கத்தின் ஒருமோசடியாகும். அரசியற் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை புறக்கணித்து, கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்துவது ஜனநாயக உரிமைகளுக்கு வரவிருக்கும் ஆபத்தை எடுத்துக் காட்டுகிறது என்று சுதந்திர ஊடக இயக்கத்தின் அறிக்கைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### தற்போதைய நிலைமையை விளக்கி

## தொழிற்சங்க கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் இன்றைய நிலை தொடர்பாகவும் அதனை சீர்ப்படுத்தஉடனடி நடவடிக்கை எடுக்கக்கோரியும் வடபிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு தொலைநகல் மூலம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைகளால் எமது பிரதேசத்தில் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்தமையையும்பெற்றோர் மத்தியில் குழப்பமும் பதற்ற நிலையும் நிலவுவதையும் தங்கள் கவனத்தின்கீழ் கொண்டுவரவிரும்புகிறோம்.

இத்தகைய சூழ்நிலையைத் தவிர்த்து, அரசாங்கம் உடனடியாக தலையிட்டு கல்விச் செயற்பாடுகளில் ஒரு சுமுக நிலையினை ஏற்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுளளது. (உ)

### ஐ தே.க.வின்

## நாட்டைப் பிரிக்கும் சூழ்ச்சிக்கு இரையாகாதீர்

### ம. வி. மு. அகிம்சைப் பிரிவு அறைகூவல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் (அகிம்சைப்பிரிவு) மத்திய குழு சார்பில் தயாரத்ன நெஹின்னவும், டாக்டர் எஸ்.சீ. பெர்னான்டோவும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை ஆதரிக்குமாறு மக்களை கேட்டுள்ளனர்.

தேசியவாதசக்திகள் விதேசியசக்திகளுடன் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் கொலைகார ஐ. தே. க. ஆட்சியை நிறுவ முயல்கின்றன.

87-90 காலப்பகுதியில் ஐ.தே.கஅரசு ஒரு இலட்சம் வரையிலானவர்களைக் கொன்று குவித்தது ஐ.தே.க. மறைமுகமாக தமிழ் பிரிவினைவாதிகளுடன் கைகோர்த்தபடி நாட்டைப் பிரிக்க முயல்கிறது.

இதற்கு சோமவன்ஸ அமரசிங்கவின் ம.வி. முன்னணியும் உடந்தையாக செயற் பட்டு வருகிறது. நாம்ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசாங்கத்திற்கு முழு ஆதரவையும் வழங்குவோம. இவ்வாறு ம வி முன்னணி (அகிம்சை) கட்சி தெரிவித்துள்ளது (உ)

## தங்க நகை மீட்பு

[கொழும்பு]

தனங்கிளப்பைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் என்பவரது வீட்டில் கடந்த 12 ஆம் திகதி 10.75 பவுண் தங்கநகைகளைப் படையினர் மீட்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர். (உ)

## ஆண்டு விழா

(புலோலி)

புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 46 வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(உ-5)

### பேச்சுக்களை முடித்துக் கொண்டு

# முஷாரப் நாடு திரும்பினார்; இருதரப்புகளும் விபரங்களை வெளியிடுவதில் தாமதம்

### இருப்பினும் முறித்துக் கொண்டு செல்லவில்லையென விளக்கம்

(புதுடில்லி)

நேற்று முன்தினம் நள்ளிரவிற்குப் பின் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் பாகிஸ்தான் திரும்பினார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்பிற்கும் இடையில் ஆக்ராவில் சுமுகமாக நடைபெற்ற பேச்சுக்களின் இறுதியில் சில தலையீடுகள் வந்ததால் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டு உடனடியாக முஷாரப் பாகிஸ்தான் திரும்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

உலக நாடுகள் பேச்சுகளின் இறுதியில் கூட்டறிக்கை வெளிவரும் என்று எதிர்பார்த்த போதிலும் அது வெளியிடப்படாமலே பேச்சு இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய தரப்பில் பேச்சுக்கள் தொடர்பாகப் பத்திரிகைச் செய்தி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தரப்பில், பேச்சுவார்த்தை தொடர்பாக சில தகவல்களை மட்டும் வெளியிட்ட வெளியுறவுச் செய்தி அதிகாரி பேச்சு இன்னும் தொடரும் என்ற கருத்துப்படப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. (து)

## செய்திப்பரல்

★ பலஸ்தீன விடுதலைக்கு உதவுவதற்கு சகல அரபு நாடுகளும் அணிதிரள வேண்டும் என ஈராக் அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

★ உலகிலுள்ள 55 கோடி சிறியரக ஆயுதங்களினால் ஆண்டு ஒன்றிற்கு 5 இலட்சம் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

★ வட-கிழக்கு ஈரானில் கடும் வரட்சி காரணமாக 15 ஆயிரம் கால்நடைகள் இறந்துள்ளன.

★ ஸ்பெயினில் பாஸ்க் பிரிவினைவாதக் குழு அண்மையில் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரையும், பொலிஸ் அதிகாரி ஒருவரையும் சுட்டுக்கொன்றுள்ளது. [உ-3]

# இந்திய- பாகிஸ்தான் பேச்சுக்கள் இலக்கை எட்டாமல் இடை நிறுத்தம்

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பகை கொண்டிருந்த இரு நாடுகளின் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைகளில் இந்திய பாகிஸ்தான் தரப்பினரின் எல்லா முரண்பாடுகளும் தீர்ந்துவிடுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

அடல்பிஹாரி வாஜ்பாயும் ஜெனரல் பர்வேஸ் முஷாரப்பும் நம்பிக்கையுடன் உரையாடியமையே ஒரு சிறப்பு அம்சமாகும்.

கடந்த இரு ஆண்டுகளில் இரு நாட்டுத் தலைவர்களும் நெருக்கமான உறவுகளைத் தடை செய்யும் விடயங்களை மனம் விட்டுப் பேசிய இதுவே முதல் முறையாகும்.

இன்றைய பேச்சுவார்த்தைகளால் எந்தத் தீர்வும் ஏற்படவில்லை.

ஆனால் பாகிஸ்தானுக்கு வருமபடி வாஜ்பாய்க்கு முஷாரப் அழைப்பு விடுத்தமை ஆக்ராவில் நடந்த பேச்சுவார்த்தைகள் மேலும் தொடரும். அமைதிக்கான வழிமுறைகள் மேலும் ஆராயப்படும் என்பதனை உணர்த்துகின்றது.

காஷ்மீர் கார்க்கில் பகுதியில் தேவையற்ற போரைப் பாகிஸ்தான் திணித்தது அந்தப் போர் நீறாகிப் போனதை நாமறிவோம்.

இப்போது ஆக்ரா பேச்சுகளில் அமைதிக்கான அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது. என்ன இருந்தாலும் ஐம்பது வருடப் பகையானது இரு நாள் உச்சி மகாநாட்டில் தீர்ந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி நம்புவது சிறுபிள்ளைத் தனமாகும்.

வரலாறு அரசியல் மதம் என்று எடுத்த பிரச்சினைகளை விடுவிக்கக் கூட்டப்பட்ட ஆக்ரா மாநாட்டின் மூலம் சிலவழிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது.

இரு நாட்டுத் தலைவர்களும் அறிமுகமாகி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருப்பது எதிர்காலப் பேச்சுக்களுக்குக் கை கொடுக்கலாம்.

இரத்தம் சிந்தாமல் பாகிஸ்தானை இராணுவப் புரட்சி மூலம் கைப்பற்றிய ஜெனரல் முஷாரப்பை இந்தியத் தலைவர்கள் சந்திக்கவில்லை. இப்பொழுது வாஜ்பாய் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

கார்கில் போரை முஷாரப் முன்னின்று நடத்தினார் என்ற வகையில் அது பற்றி முஷாரப்பின் முழுமையான கருத்தை அறிய இந்த உச்சி மாநாடு வாய்ப்பளித்திருக்கிறது.

பாகிஸ்தான் அதிபர் தன் நிலையில் விடாப்பிடியாக நில்லாது விட்டுக் கொடுத்திருந்தால் ஆக்ரா மகாநாடு வெற்றி பெற்றிருக்கும்.

வாஜ்பாயைப் பொறுத்த வரை காஷ்மீர் உள்ளிட்ட அத்தனை பிரச்சினைகளையும் அலசத் தயாராக இருந்தார்.

இன்னும் கூட நம்பிக்கை இருக்கிறது வாஜ்பாயும் ஜெனரல் முஷாரப்பும் இணைந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத்தான் போகிறார்கள்.

## சீன- ரஷ்ய நட்பு ஒப்பந்தம் கைச்சாத்து

(மாஸ்கோ)

சீன- ரஷ்ய நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

சோவியத் யூனியன் பிளவுண்டு 10 ஆண்டுகளின் பின் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் சீனா அதிபர் சியாங் ஷெமினும் நட்புறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

உலகில் வளர்ந்து வரும் செல்வாக்கைக் குறைக்கவும், அமெரிக்க ஏவுகணைத் திட்டத்தை குறைக்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1950 இல் மாஓவும் ஸ்டாலினும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்குப் பின், ரஷ்யாவும் சீனாவும் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (து)

## சர்வதேச ஒலிம்பிக் அமைப்பின் தலைவர் பதவி மாற்றம்

(மாஸ்கோ)

சர்வதேச ஒலிம்பிக் அமைப்பின் தலைவராக பெல்ஜியத்தைச் சேர்ந்த டாக்டர் ஜஸ்ரிஸ் றோகோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

21 ஆண்டுகளாகத் தலைவர் பொறுப்பு வகித்த ருவான் அன்ரோனியா அவர்களிடமிருந்து டாக்டர் றோகோ பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வு மாஸ்கோவில் இடம் பெற்றது. (து)

## ஆக்ரா மகாநாடு குறித்து கருத்து கூற அமெ.மறுப்பு

(புதுடில்லி)

ஆக்ரா உச்ச நிலைப் பேச்சுகளின் முடிவுகள் துரதிர்ஷ்டமானவை என்று பாகிஸ்தான் அரசியல் கட்சிகள் கருத்துத் தெரிவித்தன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்; ஆக்ராப் பேச்சுக்கள் மீண்டும் தொடரும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமார் உல்லாக் ஹான் பேச்சின் சாதகமற்ற பெறுபேறுகள் பாகிஸ்தானுக்கும் - இந்தியாவிற்கும் பேரழிவு ஏற்படுத்தும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் தாம் புதிய வகைத் தாக்குதலைத் தொடரப் போவதாக ஹிஸ்புல் முஜாஹுதீன் இயக்கத் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பேச்சுக்கள் தொடர்பாக அமெரிக்கா கருத்துக் கூற மறுத்துவிட்டது. எனினும், மீண்டும் இந்திய அதிகாரிகளும் பாகிஸ்தான் அதிகாரிகளும் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (து)

## கள்வர் நடமாட்டம்

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி கத்தோலிக்க அச்சகத்திற்கு முன்னுள்ள அச்சக வீதியில் கடந்த சில தினங்களாக கள்வர் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (உ-110)

## சீனாவில் வெடி விபத்து 41 பேர் மரணம்

[பீகிங்]

சீனாவில் இடம் பெற்ற வெடிவிபத்தொன்றில் 41 பேர் பலியானதுடன், சுமார் 100 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து கிடங்கில் ஏற்பட்ட விபத்திலேயே மேற்படி அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் 12 பேர் மண்ணிற்குள் புதையுண்டு மரணித்ததும் குறிப்பிடத்தக்கது. [து]

## பாகிஸ்தான் தொடர்பான நடைமுறைகளில் மாற்றமில்லை

(ஆக்ரா)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்பின் வருகைக்கு முன் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாகிஸ்தான் தொடர்பான நம்பிக்கை வாய்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் தூய்மையாக நடைமுறைப் படுத்தப்படும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

ஆக்ராவில் அவர் செய்தியாளர் மத்தியில் தெரிவிக்கையில்,

எல்லை கடந்த தீவிரவாதம் மற்றும் வன்முறைகளை ஒருபோதும் இந்தியா ஏற்றுக் கொள்ள மாட்டாதென்று குறிப்பிட்டார்.

தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகள் தொடருமென்றும் தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு ஏற்கப்பட்டதென்றும் தெரிவித்தார்.

இதேவேளை வாஜ்பாய்க்கு உதவியாகச் சென்ற மந்திரிகளிடையே கருத்து வேறுபாடுகள் இல்லையென்றும் உறுதியாகக் கூறினார் (து)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ பசி வந்தால் பறப்பவை எவை?

பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்று எம் ஊர் ஆசிரியர்கள் அடிக்கடி பேசக் கேட்கின்றோம். பசி வரும் போது மறந்து போகும் அந்தப் பத்தும் எவை என்று அறிந்துள்ளீர்களா?

மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, ஊக்கம், காமம். என்னும் பத்தும், பசிவந்தால் பறந்து விடும் என்கிறது அந்தப் பழமொழி.

### ★ பேச்சுந் திறன் அற்றவரை பேச வைக்கும் கருவி

பேச்சுத் திறனை இழந்தவர்களுக்கு உதவுவதற்காக ஸ்கொட்லாந்தில் உள்ள அறிவியல்துறையினர் புதிய வகை கம்பியூட்டர் ஒன்றை தயாரித்துள்ளனர்.

இக் கம்பியூட்டரில் ஒலி வடிவில் வெளிவரக் கூடிய பல்வேறு வார்த்தைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ளதாம். துன்பம், இன்பம், கோபம் போன்ற பல சூழ்நிலைகளில் பேசுவதற்கு தேவையான வார்த்தைகள், ஒலிக் குறிப்புக்கள் என்பன இதில் உள்ளடங்கியுள்ளன.

பேச முடியாதவர் இக் கம்பியூட்டரை சரியான விதத்தில் இயக்கி பிறரோடு உரையாடி மகிழ முடியும் என்கிறார்கள் அக் கண்டுபிடிப்பாளர்கள்.

— அவதானி —

மனத்துளது போலக் காட்டி
ஒருவற்[கு]
இனத்துள(து)ஆகும்அறிவு

குறள்

# வலம்புரி

## பேதமின்றி குரல் கொடுப்போம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இறுதி வருட மாணவன்திவ்வியன்கைது செய்யப்பட்டதை எதிர்த்து பல்கலைக் கழக மாணவர்களுக்கு அப்பால் உயர் கல்விநிறுவன மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என ஒருமித்து குரல் கொடுத்ததை எண்ணும் போது நெஞ்சம் நெகிழ்வுறுகிறது. இத்தகைய ஒற்றுமைஎல்லாத் தரப்பிலும் ஏற்படுமாயின் தமிழினம்நின்றுநிமிரமுடியும்எனினும்இவ்ஒற்றுமை தனியே ஒரு பகுதிக்கு மட்டுமென ஒதுக்கப்படுமாயின் அஃது நின்று நிலைக்காமல் போய்விடும். தமிழ் இனம் எங்கெங்கெல்லாம் அடக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஒன்று திரண்டுகுரல் கொடுப்பது ஒவ்வொரு தமிழ் மகனதும் கட்டாய கடமையாகும். இல்லையேல் எல்லாம் இருககுமிடத்தில் இருந்தால மட்டுமே சௌக்கியம் என்றாகி விடும். இந் நிலை தொடரக கூடாது மாணவன் திவ்வியன் கைதுசெய்யப்பட்டதை அடுத்து பல்கலைக் கழகத்தின் பரமேஸ்வராச் சந்தியில் முன்னர் தொலைத் தொடர்பு மற்றும் கணனி சேவை நடத்திய இளைஞன் சங்கர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் சங்கரின் கைதுக்கெதிராக யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உட்பட யாழ்ப்பாணத்தில் இயங்கும் எந்த மனிதநேய அமைப்புகளும் இதுவரை குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை. இளைஞர் சங்கர் யாழ்ப்பாணத்து தமிழ் மகன, அவனை விடுதலைப் புலிகளுடன் தொடர்பு படுத்தியே படையினர் கைதுசெய்துள்ளனர்

படையினரால் கைது செய்யப்படும் அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்கு படையினர் வழங்குகின்ற சித்திரவதைப் பரிசு நிச்சயம சங்கருக்கும் கிடைத்திருக்கும். ஓர் இடத்தில் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மனித நேய அமைப்புக்கள் இன்னோர் இடத்தில் மௌனமாக அக்கறையற்று இருப்பின் அஃது தமிழ் மக்களின் விடிவுக்கு வழிவகுக்காது.

எனவே யாழ்ப்பாணத்தில் எங்கெல்லாம் தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்படுகிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட தினங்களுக்குள நீதி மன்றில் ஆஜர் படுத்தாவிடில், அதற்காக வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென பகரும் மொழியின் பொருள் அறிய வேண்டும்

சமூகஜோதி

**கா. கணேசதாசன் ஜே.பி**

அன்று தான் திருமணம் புரிந்த மணமக்கள் மணவறையில் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கிறார்கள். பெற்றோர்கள், பெரியோர்கள் யாவரும் அறுகரிசி தூவி மணமக்களை வாழ்த்துகின்றனர். மாலைகள் ஒன்றன் மேல் ஒன்றாகக் குவிகின்றன. அபபொழுது பழைமையில் ஊறிய ஒரு முதியவரின் குரல மணமக்களைச் சிரிக்க வைக்கிறது.

நாமிருவர், நமககிருவர் என்ற காலம் இது. முதியவரோ ''ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றிப பதினாறும் பெற்றுப்பெருவாழ்வு வாழ்க'' என்று மனப்பூர்வமான அன்புடன் வாழ்ததிய வாழ்த்து யாவரையும் சிரிக்க வைக்கின்றது. சிரிப்பின் பின்னணியிலுள்ள சிந்தனைதான் என்ன சிந்திப்போம் அந்தப் பதினாறும் என்ன?

### கலையாத கல்வி

வாழ்க்கை பூராவும் நீங்கள் கற்க வேண்டும. சுற்றவற்றை மறவாது கற்றபடி வாழுங்கள் கல்வி சுற்றல், கேட்டல, அறிதல் வாயிலாக அமைபவை. அவை அவ்விதமே உங்களுக்கு ஆகட்டும். இது பதினாறு பேறுகளில் ஒன்று.

### குறையாத வாழ்வு

உங்களது இல்லறவாழ்க்கை நீண்டு செல்ல வேண்டும் பூட்டப்பிள்ளைகளையும கண்டு, நூறாண்டு வாழவேண்டும் இதுவே பதினாறு பேறுகளில் அடுத்ததாகும்.

### கபடு வராத நட்பு

பிறருககு நலல நண்பர்களாக வாழுங்கள் நலல பிற நண்பர்களைப் பெற்றும் வாழுங்கள் இது இன்பத்திலும துன்பத்திலும இனிது உதவும் இது பதினாறில் மற்றொன்று.

### குன்றாத வளம்

நீங்கள பெறும் செல்வங்கள் எல்லாம் குற்றப்படாது பிறர் வருந்தச் சேராதவையாக குறுக்கு வழியில் வராதவையாக அமையட்டும் என்பது பதினாறில் தொடர்வதாகும்.

### குன்றாத இளமை

இன்று போல என்றும் குன்றாத இளமையுடன் உடல் நலத்துடன் வாழுங்கள், உங்கள் மணிவிழாவைக்கூட மணவிழா என்று பார்ப்போர் பாராட்டும் வகையாக வாழ்வது பதினாறு பேறுகளில் ஒரு பேறாகட்டும்;

### அழுபிணி இல்லா உடல்

எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது நோயின்றி வாழ்தல். நீங்கள்நோயில்லாமல் நொடியில்லாமல் வாழவேண்டும் என்பதே பதினாறில் வரும் ஒரு பேறாகும்.

### சலியாத மனம்

சந்திரனைப் போல் வாழ்க்கை வளர்பிறையாகவும வரலாம் தேய்பிறையாகவும தேயலாம். ஆனால் தேய்வைக் கண்டு சலிபபடையாது முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என மகிழ்ச்சியுடன் வாழுங்கள், என்பதே பதினாறில ஒன்றாகிய பேறு.

### அன்பான மனைவி

கணவனின் காரியம் முழுவதிலும் கைகொடுப்பது அன்பான மனைவியின் கடமை. இன்றுதுணைவனாகப் பெற்றவன் உனக்குத் துணைவன் மட்டுமல்ல, நீயும் அவனுக்குத்துணைவிஎன்று உணர்ந்து வாழ்வதுவும் ஒரு பேறாகும் என்றார் முதியவர்.

### தவறாத சந்தானம்

சந்தானம என்பது இங்கு சந்ததி எனப்பொருள் படும். தலைமுறை தழைத்தோங்க தம்பெயர் தமக்குப் பின்னும் தழைத்தோங்க வாழையடி வாழையாக வளர வேண்டும் என்று வாழ்த்தினார் பதினாறில் ஒன்றாக.

### தாழாத கீர்த்தி

கீர்த்திவீரததால் வரலாம். கல்வியால் வரலாம். ஞானத்தால் வரலாம். பொதுத் தொண்டால் வரலாம். நீங்கள் தாழாத புகழ் பெற்று உயர்ந்த உன்னதமான பலருக்குப் பயனுள்ள வாழ்வு வாழ வேண்டும என்பதே இப் பேறாகும்.

### மாறாத வார்த்தை

பொய்யாமொழிப் புலவர். 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்றார். இதற்கமைவாக வார்த்தை மாறாமல் சத்தியம் தவறாமல் வாழவேண்டும் என்பதே பதினோராவது பேறாகும்.

### தடைகள் வாராத கொடை

தான் வாழ்ந்தால் மட்டும் போதாது தன்னைச்சார்ந்தாரும் சேர்ந்தாரும் வாழவேண்டும் என்ற கருணையுடன் வாழ்வாங்கு வாழவேண்டுமென்பதே பன்னிரண்டாவது பேறாகும்.

### தொலையாத நிதி

செல்வத்தின் தெய்வம் இலக்குமி, இலக்குமி உங்கள் வாழ்வில் உங்களுடனேயே வாழட்டும் என வாழ்த்துவதும் ஒருபேறாகும்.

### கோணாதகோல்

இது அரசர்க்கு மட்டுமல்ல இல்லறத்தாருக்கும் பொருந்தும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. தனக்கொன்று பிறருக்கொன்றுஎன்றுஎண்ணாது நீதியே நியாயமாக நீங்கள் நின்று வாழுங்கள் என்ற வாழ்த்தையும் பதினாறில் ஒன்றாகக் கூறுவர்,

### ஒருதுன்பமில்லாவாழ்வு

துன்பங்கள் தன்னால் வரலாம், தலைவனால் வரலாம், பந்துக்களால் வரலாம், பகைவரால் வரலாம், கள்வரால் வரலாம், விலங்குகளால் வரலாம் இவை எல்லாம் உங்களை அணுகக்கூடாது என்பது பதினாறில் ஒன்று.

### துய்ய நின் பாத அன்பு

நிறைவாக இது கடவுள் பக்தியைக்குறிப்பது இல்லறம் நல்லறமாக அமைய இறை வழிபாடு இன்றியமையாதது. கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகததிற்குச் சேவைசெய்வதோடு கண்ணுக்குத் தெரியாத கடவுளுககும் சேவை செய்து இல்லறத்தில் இறை அன்புடன் வாழவேண்டும் எனபதை நிறைவாகக் கொண்டார்.

எனவே நாம் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்பதை தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக உண்மைப் பொருளைப் பகிர்ந்துள்ளேன். □

## நிலத்தில்

(1ம பக்கத் தொடர்ச்சி)

நிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மேற்கண்டவாறு வாக்கு மூலம் அளித்தார்.

அவ்வாக்குமூலத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

பின்னர் ஒரு மணித்தியாலம் அளவில் ஊரெழு இராணுவ முகாமிற்கு கூட்டிச் சென்று அங்கு காம்பறை என்ற அவர்கள் சொன்ன இடத்தில் வைத்து தடிகளாலும் சப்பாத்துக் கால்களாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் தாக்கினார்கள். இரவு நள்ளிரவு 3-0ப மணிவரை தொடர்ந்து தாக்கினார்கள். எனக்கு கடுமையான தண்ணீர் தாகம் ஏற்பட்டது:

நான் தண்ணீர் கோரியபோது ஒற்றைக் காலில் நிற்கும்படி கடுமையாகக் கூறினார்கள். ஒரு காலில் நின்று தாங்கமுடியாது மறுகாலுக்கு மாறும் போது அடிவிழுந்தது மூன்று மணியளவில் இரண்டு சொட்டு தண்ணீர் மட்டும் என் வாய்க்குக் கிடைத்தது. மறுநாள எனக்கு நேரம் தெரியவில்லை. பெரும்பாலும் மதியமாக இருக்கலாம் சப்பாத்து உதையுடன் பொழுது விடிந்தது. அது -வரை எனது கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் தான் இருந்தது அதன் பின்னரும் விசாரணைகளின் போது கடுமையான அடி கிடைத்தது. அன்று இரவு அங்கே தங்கினேன் சாப்பிட முடியவில்லை. வாய் திறக்க மிகவும் சிரமப்பட்டேன். கைகளை தூக்கமுடியாத நிலையில் இருந்தேன்.

நான்கு ஐந்துபேர் அளவில் என்னைப பிடித்து உடனடியாக எனது கண்ணையும் லேஞ்சியால் கட்டி கையை ஏதோவயர்போன்ற ஒன்றால் கட்டி தாறுமாறாக தாக்கத் தொடங்கினர். சப் பாத்துக் கால்களாலும் அவர்களது துப்பாக்கிக் கைபிடிகளாலும் என்னை நிலத்தில் போட்டு உழக்கினர் எனது வாயாலும் மூககாலும் கடுமையாக இரத்தம் வந்தது (வாயைக்கட்டிய துவாய்சாட்சியால் மன்றுக்கு காட்டப்பட்டு அதில் இரத்தம் இருந்தபகுதி மன்றுக்கு காண்பிக்கப்பட்டது.)பத்துஅல்லது பதினைந்துபேர் அளவில் தொடர்ந்து தாக்கினார்கள்.

### புனர்வாழ்வு அமைச்சர் கதைத்தார்

மறுநாள் அதாவது 4.7 2001ஆம் திகதி சில இராணுவ அதிகாரிகள் வந்து பலவநதமாக என்னை வீடியோப் படம் பிடித்தார்கள. அந்த வீடியோ படத்தில் எனதுபல்கலைக்கழக மாணவ நண்பர்கள் சிலரின் பெயரைக் கூறுமாறு கூறி பலவந்தமாகக் கூறச் சொல்லி பதிவு செய்து கொண்டார்கள். அன்று இரவேநான் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிற்கு மாற்றப்பட்டேன். அதன் பின்னர் இராணுவ உயர் அதிகாரிகளும் புனர்வாழ்வு அமைச்சரும் என்னுடன் அங்கு வந்து கதைத்தனர். தற்போது நான் கடுமையான முதுகுவலியால் பாதிக்கப்பட்டுள்ளேன்.

(வ: 10, 06)

# இன ரீதியான மேலாண்மை வெறியின் விளைவே தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு

## வரதர் அணி கண்டன அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பெண்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகள்பெண்களின்உரிமைகள்பற்றிமாத்திரமல்லஅடிப்படைமனிதஉரிமைகள்மற்றும்பாதுகாப்புத் தொடர்பாகவும்அச்சமூட்டும் நிலைமைகளின்வெளிப்பாடாகும்.

மருதானைச் சோதனைச் சாவடியிலிருந்து அல்லாரை மற்றும் இளவாலை வரை அண்மைக்காலங்களில் அடுத்தடுத்து நாடு பூராகவும் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக மேற்கொளளப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து ஈழமக்கள புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணி விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இச்சம்பவங்கள் பாலுணர்வு வெறியின் விளைவுகள் என்பதற்கு மேலாக இந்த நாட்டில் நிலவுகின்ற இனரீதியானமேலாண்மை வெறியின் விளைவென்றே கருத வேண்டியுள்ளது.

இந்தக்காட்டுமிராண்டித்தனத்தை நீதி மன்றங்களாலும், சட்டங்களாலும், சமூக ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய நிறுவனங்களாலும் தடுத்து நிறுத்த முடியாது போவதால இந்த நிறுவனங்கள் மீதுள்ள அற்ப சொற்ப நம்பிக்கையையும் மக்கள் இழந்து கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கமும் சமூக நிறுவனங்களும் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

(உ)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மன்னார் அரிப்பு பகுதியில் கடந்த 15ம் திகதிஇராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லெப.கேணல்சுபாஸ்/இன்பன் (பரமநாதன் கேதீஸ்வரன் யாழ்பபாணம) என்றபோராளியும், 16ம திகதி புளியங்குளம புதூர்ச்சந்திப் பகுதியில இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலொன்றில் 2ம் லெப் மெய்மகன் (சித்திரவேல் தேவராஜ்-திருமலை) என்ற போராளியும உயிரிழந்துள்ளதாக விடுதலைபுலிகள் அறிவித்துள்ளனர்.

(ந-8)

# சமாதான முயற்சிகள் தாமதம் புலிகளின் நிபந்தனை காரணம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைந்துள்ளமைக்கு நோர்வேயில் தேர்தல் நடைபெற்றுள்ளமையும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி வருவதுமே காரணமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்பே அவ்வமைப்பின் மீதான தடை நீக்கம் பற்றி ஆராய முடியும்.

புதிய அரசியலமைப்பு மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இந்நிலையில் ஏற்கனவே அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டு எதிர்க்கட்சிகளால் ஆட்சேபிக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பை மீண்டும் இவ்வருட இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய அரசியல்யாப்பு புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகப் படுத்துகிறது. அத்துடன் பாராளுமன்ற தனிப் பெரும்பான்மையை நடைமுறை யாப்பிலிருந்து நீக்க வகை செய்கிறது.

புதிய அரசியல் யாப்பு தொடர்பால் பொது மக்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள புதிய அரசியல்யாப்பு ஆணைக்குழு வொன்றும் நியமிக்கப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மனித உரிமை மீறலை எதிர்த்து வவுனியாவில் சத்தியாக்கிரகம்

## மாத இறுதியில் நடத்த 11 கட்சிகள் ஏற்பாடு

(கொழும்பு)

அரச படைகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் மற்றும் அத்துமீறிய கைதுகள் போன்ற அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவங்கள் கண்டித்து இம்மாத இறுதியில் வவுனியாவில் மாபெரும் சத்தியாக் கிரகப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு 11 கட்சிகள் கொழும்பில் கூடி முடிவு செய்துள்ளன.

தமிழ் மக்கள் மீதான அடிப்படை உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் தொடர்பாக நேற்று 11 கட்சிகளும் கொழும்பில் கூடி ஆராய்ந்த போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகயாம். எம். பி மாவைசேனாதிராசா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ரெலோ, தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈ. பி ஆர். எல் எவ் சுரேஷ் அணியினர் மற்றும் தமிழ்க்கட்சிகள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக மாவைசேன திராசா எம். பி மேலும் தெரிவிக்கையில் முதற்கட்டமாக வவுனியாவில் இம்மாத இறுதியில் சத்தியாகக்கிரகம் நடத்துவதென்றும் இதனை நடாத்த ஏனைய மாவட்டங்களும் இந்தப்போராட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (வ)

---

**அனைத்து...**

அறிவித்து பல்கலைக்கழகத்தை திறந்து விரிவுரைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்க முடியுமெனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

---

**பத்திரிகை..**

சுவரொட்டிகளை ஒட்டியவர்களை எச்சரித்ததுடன் சுவரொட்டிகளையும் பறித்துச் சென்றனர்.

இந்நடவடிக்கையைக் கண்டித்து நேற்று சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஐக்கியதேசியக்கட்சிப் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா, ரெலோ எம். பி விநோ ராதலிங்கம் மற்றும் யாழ் மாவட்ட எம்.பி தி மகேஸ்வரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில கலந்துகொண்டனர். [இ]


**வடகடல் (வரையறுக்கப்பட்டது)**

**NORTH SEA LTD**

வடகடல் (North Sea Ltd) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மீன்பிடிப்பு வலைத் தொழிற்சாலை விரைவில் மீன்பிடிவலைகளை உற்பத்தி செய்ய இருப்பதால், இத்துறையில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள் தகுந்த ஆவணங்களுடன் இம்மாதம் 20ந் திகதி வெள்ளிக்கிழமை குருநகரில் அமைந்துள்ள வடகடல் வலைத்தொழிற்சாலைக்கு வந்து காலை 9-30 மணிக்கும நண்பகல 12 மணிக்கும் இடையில் பிரதி பொது முகாமையாளரைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளித்தவர்கள் மீண்டும் சமுகம் கொடுக்கத் தேவையில்லை.

பிரதிப் பொது முகாமையாளர்,
வடகடல வலைத்தொழிற்சாலை,
குருநகர்,
யாழ்ப்பாணம். (கி-2238)



**ராஜா**
**யாழ்ப்பாணம்**
இளைய தளபதி விஜய் (?)
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-30 [பு. நே]
சனி ஞாயிறு 10-30, 2-00, 5 00 [பு. பே]
(கி-2125)


# மட்டு. பத்திரிகையாளருக்கு இராணுவம் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கைச் செய்தியாளரும் மட்டக்களப்பு மாவட்ட மூத்த பத்திரிகையாளருமான பீ நடேசன் இராணுவத்தினரால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு இராணுவ முகாமுக்கு பத்திரிகையாளர் நடேசனை அழைத்த மட்டக்களப்பு இராணுவத் தளபதி கேணல் மானவடகே, இராணுவத் தகவல்கள் மற்றும் மட்டக்களப்பு நிலைவரங்களை செய்தியாக வெளியிட்டு விடுதலைப் புலிகளுக்கு தகவல் வழங்குவதாகக் குற்றஞ் சாட்டியதுடன், அரசாங்கத்துக்கு விரோதமாகவோ, படையினருக்கு எதிராகவோ, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவோ செய்திகளை வெளியிடக் கூடாதென எச்சரிக்கை செய்தார்.

இவேளை படையினர் செய்தியாளரை அச்சுறுத்திய செயல். பத்திரிகைச் சுதந்திரத்தை மீறும் செயலென்று கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் ஆகியன கண்டித்துள்ளன.

அத்துடன் பத்திரிகையாளர் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் பாதுகாப்புச் சங்கத்துக்கும் முறையிடப்பட்டுள்ளது. (இ)

**கலந்துரையாடல்**

கல்விப் பொதுத உயர்தரப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நேர் முகப் பரீட்சைகக்கு தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று மு. ப 10 30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (உ)

---

**கண்டனக்**

கை விடுத்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியிருந்து யாழ் பல்கலைக் கழக மாணவ சமூகத்தின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கண்டனப் பேரணியும் கண்டனக் கூட்டமும் இடம்பெற்றுள்ளது. (இ)

---

**மாணவன்..**

இதனையடுத்து சட்டமா அதிபரின பணிப்புரை வரும் வரை விளக்கமறியலில வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இம்மாதம் 2 ம் திகதி உரும்பிராய் மூன்றுகோவிலடிபபகுதியில வைத்து இராணுவத்தினரால கைது செய்யப்பட்ட மாணவன் திவ்வியனை நேற்றுக்காலை காங்கேசன் துறை பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சார்பில உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நீதிமனறில ஆஜர் படுத்தினார்.

இதனையடுத்து திவ்வியனை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவிட்ட யாழ் நீதிபதி இ த. விக்கினராஜா சட்ட வைத்திய அதிகாரிகளிடம் கொண்டு சென்று வைத்திய பரிசோதனைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ் சிறைச்சாலை பதில அத்தியட்சகருக்குப் பணிப்புரை வழங்கினார்.

அதேவேளை சந்தேகநபரான திவ்வியனுக்கு வைத்தியசாலையில வைத்து உள்ளக சிகிச்சை அளிக்கவேண்டுமென வைத்திய ஆலோசனை வழங்கப்படுமானால சந்தேகநபரின் பாதுகாப்பிற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் யாழ் பொலிஸ நிலைய பொறுப்பதிகாரியை நீதவான் இ த விக்கினராஜா பணித்தார் வைத்திய பரிசோதனை அறிக்கையை சட்ட வைத்திய அதிகாரி இம்மாதம் 24ம் திகதி நீதிமன்றில சமர்ப்பிக்க வேண்டும் எனறும நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (வ-10-6)

# வாகனங்கள் வந்து சேர்ந்தன

(புலோலி)

யாழ் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பிக் அப் வாகனம் ஒன்றும், சிறிய வான் ஒன்றும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கல்வியியல்கல்லூரி பீடாதிபதி எஸ் கமலநாதன பருத்தித்துறைத்துறை முகத்தில வைத்து இவற்றைப் பொறுப் பேற்று சென்றுள்ளார். உ-52

---

**சபாநாயகர்...**

தலைவர் ரவூப் ஹக்கீம், ஐக்கியதேசியக்கட்சி பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, உப தலைவர் காமினி அத்துக்கோறளை ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவினர் நேற்று சபாநாயகரை சந்தித்து மேற்படி சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரினர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்த இணக்கம் தெரிவித்த சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா தனது செயலாளர் நிஹால் செனவிரத்தின தலைமையில் இருவர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்துள்ளார். (இ)

---

**கொழும்பு..**

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், சில உறுப்பு கட்சிகளின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில, நாடுதழுவிய ரீதியில் மக்களை கொழும்புக்கு அழைத்துவந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ)


உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்..

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, --- யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** — 171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம், [கி/2195]

**நகுலா நகைமாடம்** — 241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது